## ஒரு முஃமினுடைய (விசுவாசி) இல்லம்

ஒரு முஃமினுடைய அடையாளமும் அறிமுகமும் அவனுடைய ஈமான் மற்றும் இஸ்லாம்தான். இதுபோன்றே அவனுடைய வீடும் இஸ்லாமியக் கொள்கைகள் மற்றும் விசுவாசப்பண்புகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு செயல்ரீதியான முன்மாதிரியாக அமையும். இஸ்லாத்தின் அழகும் மேன்மையும் நற்பேறுகளும் வெளிப்படையாகவே தென்படும். இதிலும் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் அமைகிறது. நாமும் இறைத்தூதர் ﷺ அவர்களைப் போன்றே நம் வீடுகளை (மஸ்ஜிதாக) தொழுகைக்கான இடமாகவே ஆக்கிக்கொண்டு சுன்னத்தான, நஃபிலான தொழுகைகளை வீடுகளில் தொழுவதைப் பேணுதலுடன் கடைபிடிக்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: மக்களே, உங்களுடைய நஃபிலான தொழுகைகளை உங்கள் வீடுகளில் நிறைவேற்றுங்கள், ஏனெனில், கடமையான (ஃபர்ஜ்தான) தொழுகைகளைத்தவிர வீடுகளில் தொழும் தொழுகைகள் தான் அனைத்திலும் சிறந்த தொழுகைகளாகும்.(متفق عليه)

தொழுகைகள் வீடுகளில் நிறைவேற்றப்படும்போது அந்த வீடு அல்லாஹ்வுடைய வணக்கம் மற்றும் அவனுக்கு அடிபணியும் செயல்கள் மிகுந்த ஒன்றாக ஆகிவிடுகிறது. இறைவணக்கம் மற்றும் அவனுக்கு அடிபணியும் ஒரு சுற்றுச்சூழலும் உருவாகிவிடுகிறது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: **உங்கள் தொழுகைகளில் சிலவற்றை உங்கள் இல்லங்களில் நிறைவேற்றுங்கள், அவற்றை மண்ணறைகளாக ஆக்கிவிடாதீர்கள் (متفق عليه)**

பெண்களின் தொழுகைகள் அனைத்துமே இல்லங்களில் தொழப்படுவது சிறந்ததாகக் கருதப்படுகின்றன. ஹஜ்ரத் உம்மு ஹமீத் சாஃஇதிய்யா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து, இறைத்தூதரே ﷺ நான் உங்களுடன் சேர்ந்து தொழவேண்டும் என விரும்புகிறேன் என்று கூறினேன். அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நான் உங்களுடைய ஆர்வத்தை அறிவேன், ஆனால் நீங்கள் உங்கள் வீட்டில் தொழுவது உங்கள் முஹல்லா மஸ்ஜிதில் தொழுவதை விடச்சிறந்தது, மேலும், உங்கள் முஹல்லா மஸ்ஜிதில் தொழுவது ஜாமிஆ மஸ்ஜிதில் தொழுவதை விடச் சிறந்தது. (அஹ்மத். தபரானி).

நம் வீடுகளின் சுற்றுச்சூழலை இஸ்லாமியக் கொள்கைகளுக்கேற்ப வடிவமைப்பதில் வீட்டின் ஒரு பகுதியினையே வணக்கஸ்தலமாக ஆக்கிக்கொள்வது எவ்வளவு சிறந்ததாக இருக்கும், அங்கே தொழுகை மட்டுமல்லாது வீட்டிலுள்ளவர்கள் அனைவருமே ஒன்றுசேர்ந்து அல்லாஹ்வை தியானிக்க

www.uzairfalahi.com

வும் (திக்ரு செய்யவும்) முடியும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்
கள்: **அல்லாஹ்வுடைய தியானம் செய்யப்படும் வீடும் அல்லாஹ்வுடைய
தியானம் செய்யப்படாத வீட்டின் உதாரணம் ஒரு உயிருள்ளவன் மற்றும்
இறந்துவிட்டவனைப்போன்றதாகும்.** (முஸ்லிம்).

ஒரு வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து வீட்டில் திருக்ஃகுர்ஆன்
ஓதுவது மற்றும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒரு
ஃகுர்ஆன் ஓதவேண்டும் என்ற ஒரு வழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்வார்
களேயானல் வீட்டில் எவ்வளவு அழகான ஒரு சுற்றுச் சூழல் காணப்படும்.
அதற்கும் மேலாக, வாரத்தில் ஒரு முறையோ அல்லது மாதத்தில் ஒரு
முறையோ வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து திருக்ஃகுர்
ஆனை விளங்கிக்கொள்வது, ஹதீத்ஸ்களின் விளக்கம் மற்றும் இஸ்லா
மிய ஷரீஅத் பற்றிய உரையாடல் அல்லது இறைத்தூதர் ﷺ அவர்களு
டைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றிய விஷயங்களைப் பேசுவது எவ்வளவு
சிறந்ததாக இருக்கும். உண்மையில், நபித்தோழர்களின் (ர) வீடுகள் இவ்
வாறே இருந்தன. எந்நேரமும் அல்லாஹ்வின் தியானம், வீடுகளில் திரு
மறை ஓதப்படும் முழக்கம், எந்த நேரத்திலும் ஒருவர் அவர்களுடைய வீடு
களின் புறமாகச்சென்றாலும், திருக்ஃகுர்ஆன் ஓதும் சப்தம் கேட்கும்.
இரவுகளில் மக்கள் அல்லாஹ்வுக்குமுன் சிரம் பணிந்தவர்களாக இறைஞ்சி
மன்றாடிக்கொண்டிருப்பது மற்றும் அவர்களுடைய அழுகும் சப்தம் வெளி
யிலும் கேட்கும். இன்றும்கூட நாம் இந்தப் பண்புகளை நம் இல்லங்
களில் உருவாக்க முடியும், இவை தேவையானவையும்கூட. ஒவ்வொரு
வருடமும் குறிப்பிட்ட சிறப்புமிக்க சில நாட்கள் வருகின்றன. அந்த நாட்
களில் நாம் இதனை மேலும்சிறப்பான முறையில் நிலைநாட்ட முடியும்.
உதாரணமாக, ரமஜ்தான் மாதத்தில் சிறுவர் முதல் முதியோர் வரை
இறைவணக்கம் மற்றும் திக்ரு ஆகியவற்றில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்
றனர். இதுபோன்றே, துல் ஹிஜ்ஜா மாதத்தில் முதல் பத்து நாட்கள்
அல்லது ஒவ்வொரு மாதமும் அய்யாமுல் பீஜ்த் எனப்படும் மூன்று நாட்
கள். இந்த நாட்களில் நம் வீடுகளில் இறைவணக்கம் முழு ஈடுபாட்டுடன்
மேற்கொள்ளப்படுமானால் வீட்டில் நன்மைகளும் இறைவனுடைய
அருளும் பொங்கும் அத்துடன் குறிப்பாக இளைய தலைமுறையினரான
சிறுவர்கள் மீது இது ஒரு ஆழ்த்த தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் அவர்க
ளுடைய சிந்தனைகள் மற்றும் செயல்களில் சீர்த்திருத்தத்திற்கு வழிவகுக்
கும். நம் இல்லங்களெல்லாம் பள்ளிவாசல்களுடன் இணைந்த பகுதிகளா
கவே இருந்திருக்கக்கூடாதா?

www.uzairfalahi.com

* * *